இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 201 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 18 – ஞாயிற்றுக்கிழமை 02 மார்ச் 2025 – மதுரை 36 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 201 : Thiruvalluvar Year - 2056 - Maasi 18 - Sunday 02 March 2025 - Madurai 36 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2025) தனது பிறந்த நாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2025) தனது பிறந்த நாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

## பிறந்த நாள்: சென்னை – அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கழகத் தோழர்கள் பல்லாயிரவர் திரண்டு வாழ்த்து!

## நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்து தெரிவித்தனர்!

## கட்சிகளின் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 2 -**

**கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது 72-ஆவது பிறந்தநாளையொட்டி அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களின் வாழ்த்துகளைப் பெற்றார். மேலும் கட்சித் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.**

தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூக நலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தி.மு.க. தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி, பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, தமிழ்நாட்டில் என்றும் ‘இந்தி திணிப்பை எதிர்ப்போம், மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’ என அயராது உழைத்த அண்ணாவின் வழியில் அனைவரும் உழைப்போம் என பேரறிஞர் அண்ணாவின் நினைவிடத்தில் முதலமைச்சர் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

இதைத்தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும், மலர் தூவியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் பணியாற்றக்கூடிய 105 ஊழியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் அவர்கள் வழங்கினார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று தமது பிறந்த நாளில், காலையில், தமது குடும்பத்தினருடன் கேக் வெட்டியபோது எடுத்த படம். பொதுச் செயலாளர் துரைமுருகன், திருமதி துர்கா ஸ்டாலின், இயக்குநர் அமிர்தம், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

இதைத்தொடர்ந்து, சென்னை வேப்பேரியில் பெரியார் திடலில் அமைந்துள்ள, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் நினைவிடத்தில், மலர் வளையம் வைத்து முதல்வர் அவர்கள் மரியாதை செலுத்தினார். அப்போது, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் முதலமைச்சருக்கு பெரியார் புத்தகத்தை வழங்கினார்.

பின்னர், சென்னை கோபாலபுரம் இல்லம் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, சி.ஐ.டி. காலனியில் உள்ள இல்லத்துக்குச் சென்ற முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், ராஜாத்தி அம்மாளிடம் வாழ்த்துப் பெற்றார். நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவரும், கழக துணை பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி உடனிருந்தார்.

**முதலமைச்சர் பேட்டி!**

சென்னை கோபாலபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, “இந்தித் திணிப்பை தடுப்பதே தனது பிறந்தநாள் கொள்கை” என்று தெரிவித்தார். மாநிலத்தில் சுயாட்சி வேண்டும் மற்றும் இந்தித் திணிப்பு கூடாது என்பதே தனது பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார். தனது கவலைகள் அனைத்தும், மாநில உரிமைகள் பற்றியே உள்ளதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

**அண்ணா அறிவாலயம், சென்னை!**

தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் அமைச்சர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் வாழ்த்து 3 மணி நேரத்திற்கு மேல் பொதுமக்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடினார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். தமிழ்நாட்டின் நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்! தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்! தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்! இதுதான் ஒரே இலக்கு!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகள், தொண்டர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு மற்றும் அமைச்சர்கள், நிர்வாகிகள் வாழ்த்து கூறினர். அப்போது, தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம், தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்! என, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

தி.மு.க. கூட்டணி கட்சித்தலைவர்களும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர், கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன், கம்யூனிஸ்ட் மூத்த தலைவர்கள் பாலகிருஷ்ணன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், திருப்பூர் அல்தாப், மக்களவை உறுப்பினர் துரை வைகோ உள்ளிட்டோர் முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

**எல்லார்க்கும் எல்லாம் என உறுதி கொண்டிருக்கும், அனைவருக்குமான முதல்வருக்கு அன்பான பிறந்தநாள் வாழ்த்துகள் !**

**பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் திரண்டு அணி வகுத்து 3 மணி நேரத்திற்கும் மேலாக வாழ்த்தினர் !**

**அண்ணா அறிவாலயத்தில் ஆடவர்,பெண்டிர் என அனைத்துத் தரப்பினரும் திரண்டு வாழ்த்து !**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயம் விழாக்கோலம் பூண்டுள்ளது. கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு, முதலமைச்சரின் பிறந்த நாளை உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர். காலை முதலே கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் திரண்டனர். அண்ணா அறிவாலயத்திற்கு வந்த முதலமைச்சர் அவர்களுக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பளித்தனர். பின்னர்,

---

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

# குடியரசுத் தலைவர் - பிரதமர் - ராகுல்காந்தி வாழ்த்து!

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் – தொலைபேசியில் வாழ்த்துத் தெரிவித்தார்!

**சென்னை, மார்ச் 2 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் மோடி, நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.**

குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் மூலம் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அதில், முழு ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

**பிரதமர் மோடி வாழ்த்து!**

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நீண்ட ஆயுள் மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் இருக்குமாறு வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

**ராகுல் காந்தி வாழ்த்து!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

“எனது சகோதரரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

இந்தியாவின் வளமான பன்மைத்துவத்தையும், கூட்டாட்சி அமைப்பையும், அரசியலமைப்பின் விழுமியங்களையும் பாதுகாக்க நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து நிற்கிறோம்.

தாங்கள் நல்ல உடல்நலத்துடனும், தமிழ்நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றுவதில் தொடர் வெற்றியுடனும் திகழ வாழ்த்துகிறேன்”.

இவ்வாறு ராகுல்காந்தி தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

“அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாப்பது, ஜனநாயக கொள்கைகளை நிலை நிறுத்துவதில் ஒன்றாக பயணிப்போம்” என்று கூறியுள்ளார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் “நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ வாழ்த்துவதாக” குறிப்பிட்டுள்ளார்.

**சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து!**

நடிகர் ரஜினிகாந்த் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

அப்போது, “நீண்ட உடல் ஆராக்கியத்துடன் தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை செய்யுமாறு” வாழ்த்தினார்.